# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate


Official Property Record



Digitally Verified Record - Powered by Verified RealEstate™

அனுப்புநர்
திரு.இரா.சு.மாரியப்பன்,பி.இ.,எம்.பி.ஏ,
நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்/
உறுப்பினர் செயலர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
நாகர்கோவில்,கன்னியாகுமரி மாவட்டம்
G-mail: dtcpkkdistrict@gmail.com

பெறுநர்
ஆணையாளர் அவர்கள்,
நாகர்கோவில் மாநகராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

---

ந.க.எண் 2002/2020கமாநஊஅ, நாள்: 30 .12.2020

அய்யா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கன்னியாகுமரி மாவட்டம் - நாகர்கோவில் மாநகராட்சி, வேம்பனூர் கிழக்கு கிராமம் சர்வே எண் 802/17,802/20, 802/21,804/8A2இல் 8928ச.மீ (2.20 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு சிறப்பு நிபந்தனையுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரர்கள் திருமதி.T.நாகேஸ்வரி, திருமதி.மேரி ஜாஸ்மின் விஜய்,திரு.ஜார்ஜ் ஸ்டிபன் ஆகியோரது விண்ணப்பம் நாள் 14.12.2020
2. மனுதாரருக்கு முகவரியிட்ட இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 23.12.2020.
3. மனுதாரரின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள் 26.12.2020.
4. சாலை மற்றும் பூங்கா ஒப்படைப்பு இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலக தானபத்திரம் எண் 4167/2020 நாள் 26.12.2020
5. தமிழ்நாடு மின்சார வாரியம் ஒதுக்கீடு பகுதி ஒப்படைப்பு இராஜாக்கமங்கலம் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திரம் எண் 4168/2020, நாள் 26.12.2020.
6. அரசாணை எண் 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 04.05.2017.
7. அரசு செயலர், வீ.வ(ம)ந.பு.வ.துறை கடிதம் எண் 19113/நவ4(3)/2017, நாள் 30.08.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 12201/2017சிபி, நாள் 28.09.2017.
9. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் 4367/2019பிஏ2, நாள் 05.02.2020.

T. ராஜன்

10. அரசாணை எண் 166, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 29.11.2018. (Insisting TNRERA Registration)
11. அரசாணை எண் 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 09.12.2020.

------------------

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், நாகர்கோவில் மாநகராட்சி, வேம்பனூர் கிழக்கு கிராமம் சர்வே எண் 802/17,802/20,802/21, 804/8A2இல்8928ச.மீ (2.20 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிட ஏதுவாக பார்வை 2-ல் கண்ட 23.12.2020 நாளிட்ட கடிதத்துடன் அனுப்பப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்திற்கேற்ப தார் சாலைகள் அமைக்கப்பட்டு பார்வை 3-ல் கண்ட மனுதாரரின் கடிதத்துடன் பார்வை 4 மற்றும் 5-இல் கண்ட தானப்பத்திர நகல் பெறப்பட்டதனைத்தொடர்ந்து சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு *ம.வ/ககுமாநஊஅ எண்.06/2020* என எண்ணிட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. வரைபட நகல்கள் தொடர்நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு TNCDBR-2019 விதி 47(6)-ன்படி 633.41ச.மீ பரப்பளவில் பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>சிறப்பு நிபந்தனைகள்:</u>

1. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம்,குத்தகை பத்திரம், பட்டா,தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர்கள் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

T. ராஜன்

2. “பார்வை 7-ல் கண்ட அரசு கடிதத்தின்படி “ உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் துறை சர்வே எண் உட்பிரிவுகள் செய்து அதற்கான விபரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்”.
3. **This order is passed subject to the outcome of the Madras High Court Madurai Bench writ petition W.P(MD)No.8948 of 2019.**

<u>நிபந்தனைகள்</u>

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை எண் 16-ன்படி சாலை மற்றும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை பார்வை 4-ல் கண்டுள்ள தானபத்திரம் எண் 4167/2020,நாள் 26.12.2020-ன் மூலம் ஆணையாளர், நாகர்கோவில் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 5-ல் கண்டுள்ள தானப்பத்திரம் எண் 4168/2020, நாள் 26.12.2020-ல் மூலம் 31.75 சதுர மீட்டர் இடம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின்பகிர்மானக்கழகம், கன்னியாகுமரி மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு தார் சாலையின் தரத்தினை (Quality of Layout Road) ஆணையாளர், நாகர்கோவில் மாநகராட்சி அவர்கள் உறுதி செய்து கொண்டும், நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டுமெனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
2. பார்வை 6-ல் கண்டுள்ள அரசாணையின் படி திட்டமில்லாத பகுதிக்கான நில உபயோக மாற்ற விதிகள் 2017 விதி 3-ன் படி கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) உள்ளாட்சி கணக்கில் பெற்றுக்கொண்டும், விதி 9-ன்படி மனுதாரர் மனையிடத்திற்கான சந்தை நில மதிப்பீட்டுத்தொகையில் 3% (மூன்று விழுக்காடு) தொகையினை மனுதாரரிடமிருந்து பெற்று அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேற்படி தொகை பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. பார்வை 8-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றிக்கையின் படி **The Tamil Nadu Government in G.O.(Ms)No.112, Housing and Urban Development Department, dated 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act, 2016. The Promotor has to advertise, market, book,sell or offer for**

T. ராஜன்

sale, are invite person to purchase in any manner, any plot, of it only after building as the case may be in any Real Estate Project or pad of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

4. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண் 19(ஈ)-ன் படி அவ்வுத்தரவின் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

30.12

உதவி இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்

இணைப்பு

1. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் - 2 நகல்கள்
2. பார்வை 4 மற்றும் 5-ல் கண்ட தானப்பத்திர அசல் நகல்

<u>நகல்</u>

1. செயலாளர் (திட்டம்),
   தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையர்(TNRERA),
   1ஏ, காந்தி இர்வின் பாலம் ரோடு,
   முதல் தளம், எழும்பூர்,
   சென்னை.
2. கண்காணிப்பு பொறியாளர்,
   தமிழ்நாடு மின்சார வாரியம்,
   நாகர்கோவில்
3. மனுதாரர்கள். திருமதி.T.நாகேஸ்வரி,
   திருமதி.மேரி ஜாஸ்மின் விஜய்,
   திரு.ஜார்ஜ் ஸ்டிபன்,
   188,அம்மன்கோவில் தெரு,
   கலைநகர், கோட்டார் அஞ்சல்
   நாகர்கோவில் - 629 002
   } கடிதம் மட்டும்
4. தொழில் நுட்ப வைப்பறை

T. ராஜன்

**மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: ஆஷா அஜித், இ.ஆ.ப.,**

**(நாகர்கோவில் மாநகராட்சி சட்டம் 2019 பிரிவு 250,251–இன் கீழ்)**

ந.க .எண்:12507/2020/எப்1

நாள்.09.02.2021

பொருள்: மனைப்பிரிவு – நாகர்கோவில் மாநகராட்சி – மாநகராட்சிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்:802/17,802/20,802/21,804/8A2–இல் 8928.00 ச.மீ (2.20 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்:2002/2020, ககுமாநஊஅ, நாள்:30.12.2020.
2. மாநகர பொறியாளர் அவர்களின் அறிக்கை நாள்:06.01.2021.
3. மாமன்ற தீர்மானம் எண்:30, நாள்:29.01.2021.

**********

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வேம்பனூர் கிழக்கு கிராமம் புல எண்:802/17,802/20,802/21,804/8A2–இல் 8928.00 ச.மீ (2.20 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1–இல் கண்டுள்ள கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படியும் பார்வை (3)–இல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின்படியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படியும் திருமதி. T. நாகேஸ்வரி திருமதி. மேரி ஜாஸ்மின் விஜய் மற்றும் திரு. ஜார்ஜ் ஸ்டீபன் ஆகியோரின் மனைப்பிரிவிற்கு கீழ்கண்ட நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019–இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கு பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும்.
2. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை மனுதாரர் சொந்த செலவில் வருவாய் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்து ஒப்படைக்கப்படவேண்டும்.
3. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் ம.வ/ககுமாநஊஅ எண்.06/2020–என தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட

T. ராஜன்

த்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள் அளவுகள், ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

4. தெருமுனையில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.

5. மேற்சொன்ன இரு நிபந்தனைகளை நிறைவேற்றும் முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ அல்லது வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.

6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். இதில் கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டடம் கட்டுவதற்கு பயன்படுத்தக்கூடாது. பொது வசதிகளுக்காக தேர்வு செய்யப்பட்டுளள இடங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும்.

7. விரிவு அபிவிருத்தி திட்டப் பகுதிக்குள் அமையும் மனைப்பிரிவு எனில் திட்ட விதிகளின்படி தனிதொரு குடியிருப்பு மனையில் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். ஒருபக்கம் இணைந்த வீடுகள் அனுமதிக்கப்பட்ட மனையில் ஒருபக்கம் இணைந்த வீடுகளே கட்டப்பட வேண்டும். இதற்கு மாறாக எக்காலத்திலும் அனுமதிக்கப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவினையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் பயன்படுத்தக்கூடாது.

8. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு வரைபடத்தில் காட்டியுள்ளவாறு கட்டட வரம்பு விடப்படவேண்டும். மனைப்பிரிவில் அமையும் 7 மீட்டர் முதல் 9 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு முன்பக்க இடைவெளிகள் 1.5 மீட்டரும், 9 மீட்டருக்கு மேல் 12 மீட்டர் வரையிலான சாலைகளுக்கு 3.00 மீட்டரும் 12 மீட்டருக்கு மேல் 18 மீட்டர் வரையிலான அகல சாலைகளுக்கு 4.5 மீட்டரும், 18 மீட்டருக்கு மேல் அகல சாலைகளுக்கு 6 மீட்டரும் கட்டட வரம்பு விடப்பட வேண்டும்.

T. ராஜன்

9. மனையின் பக்க எல்கைக்கும் கட்டடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி அல்லது ஒருபக்கம் மட்டும் குறைந்தது 3 மீட்டர் திறந்தவெளி விடப்படவேண்டும். 10 மீட்டர் வரை மனையின் அகலம் உடைய மனைகளுக்கு பக்கத் திறவெளி ஒரு பக்கத்திலாவது குறைந்தது 1.5 மீட்டர் விடப்படவேண்டும்.
10. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.
11. 12 மீட்டர்வரை அகலம் கொண்ட மனையின் பின்புற எல்லைக்கும் கட்டடத்திற்கும் இடையில் குறைந்தது 1.5 மீட்டர் அளவுள்ள திறந்த வெளி இருத்தல் வேண்டும்.
12. மனையின் எல்லைக்கும் கட்டட வரம்பிற்குட்பட்ட நிலப்பகுதியில் தெருவின் உயர் மட்டத்திலிருந்து 2 மீட்டர் உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எவ்வித கட்டடமோ, சுவரோ கட்டுதல் கூடாது.
13. கடைக்கால் (Foundation) அமைக்க தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமன்படுத்தவோ, நிலச்சரிவை சீர்செய்யவோ, மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள், குழிகள் ஏற்படுத்தவோ கூடாது.
14. மனையில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பு வீட்டிலும் மழைநீர் வடிகால் வசதி, கழிவு நீர் சாக்கடை வசதி போன்ற சுகாதாரவசதி பேன்றவை சுகாதார அதிகாரியின் ஒத்திசைவிற்கு ஏற்ப அமைத்தல் வேண்டும்.
15. மூலை முடக்கு பகுதிகளில் மின்கம்பங்கள், தெருவிளக்கு கம்பங்கள் எதுவும் நடுதல் கூடாது.
16. 9 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும் நிழல்தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும்.
17. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய உள்ளாட்சி அதிகாரியிடமிருந்து ஒப்புதல் பெற்றுக்கொள்ளவேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெறவேண்டும்.
18. மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளதுபோல் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்த வேண்டும்.

19. கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம், இடங்கள் வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்துகொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
20. மனுதாரரால், தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள பூங்கா, சிறுவர் விளையாடுமிடம், திறவிடம் போன்றவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் உட்பிரிவு செய்து உள்ளாட்சியிடம் ஒப்படைக்க வேண்டும்.
21. மனையின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின்கம்பி பாதை, தந்திக்கம்பி பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
22. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்குட்படுவதாக எழுத்து மூலமாக நிர்வாக அதிகாரி (Excecutive Authority) உடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மனைப்பிரிவு நிபந்தனைகளை தொடர்புடைய சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மனைகள் விற்கப்படுவதும் அல்லது குத்தகைக்கு விடப்படுவதும் மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செய்யப்பட வேண்டும். மனைகள் விற்பவரையும், வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
23. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.
24. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் / மனைப்பிரிவு ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்துச் செய்யப்படும்.
25. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் – விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6x4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

T. ராஜன்

26. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

09/02/21

ஆணையாளர்,
நாகர்கோவில் மாநகராட்சி.

9.2.2021

**இணைப்பு:**

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்.

**பெறுநர்:**

திருமதி. T. நாகேஸ்வரி, திருமதி. மேரி ஜாஸ்மின் விஜய்,
மற்றும் திரு. ஜார்ஜ் ஸ்டீபன்,
188, அம்மன்கோவில் தெரு,
கலை நகர்,
கோட்டார்– அஞ்சல்,
நாகர்கோவில்– 629 002.

**நகல்:**

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாகர்கோவில்.
2. மாநகராட்சி பொறியாளர்,(அடிப்படை வசதிகள் பராமரிப்பின் பொருட்டு).
3. மாநகராட்சி வருவாய் அலுவலர் (பொ), (காலியிட வரிவிதிப்பின் பொருட்டு).

T. ராஜன்

## Our services go beyond

### Buying & Selling Services
Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services
Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals
Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services
Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services
Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

## Smarter Tools, Stronger Decisions

### Property Valuation & Cost Estimation
Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

### Ownership, Compliance & Legal Verification
Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

### Zoning & Land Use Analysis
Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

### Property Documentation & Workflow Tools
Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

### Vastu & Property Management Tools
Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate